3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மின் கட்டண பாக்கிக்காக மின் இணைப்பு துண்டிக்கப் பெறுவது குறித்து.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே ....

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் பிரச்னைகளை அவை முன் வைத்த பின்பு ஏதேனும் விடுபட்டுப் போய் இருந்தால் அதைப் பற்றி பின்னால் எழுப்பலாம். ஒரு வேளை நான் எடுத்துக்கொள்ள இருக்கிற பிரச்னையையே நீங்கள் இப்போது சுட்டிக்காட்டலாம்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம். விவசாய விளை பொருள்களுக்குச் சரியான விலையில்லாத நேரத்தில் மூண் றாண்டுகளுக்கான மின் கட்டணத்தை உடனே கட்ட வேண்டு மென்று வற்புறுத்தி மின் இணைப்பை போலீஸ் உதவியோடு தமிழகமெங்கணும் துண்டிப்பதையொட்டி விவசாயிகள் மத்தி யில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவை யின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டு, திரு. நா. சுந்தரராஜ், திரு. சோ அழகர்சாமி, திரு. எம்.ஏ.லத்தீப், திரு. ஏ. சுவாமிதாஸ், திரு. இரா. ஆதிசுவாமி, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. பொ. விஜயராகவன், திரு. மு. அம்பிகாபதி, திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு செ. சிவசாமி, திரு. ஓ. சுப்பிரமனியம், திரு. மு. ஆண்டிஅம்பலம், திரு. ஏ.ஆர். மாரிமுத்து, திரு. ஓ. சோ. வேலுச்சாமி, திரு. கே. கந்தாமி, திரு.ஏ.எஸ். சதாசிவம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதிலே 6 பேர் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. நா. சுந்தரராஜ்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இன்றையதினம் தமிழகம் பூராவும் எரிந்து கொண்டு இருக்கும் மிக முக்கிய மான பிரச்னை மின்சார இணைப்புகளை மின்சார பம்பு செட்டு களிலிருந்து துண்டிக்கும் காட்சிதான் என்று கூற வேண்டும். நேற்று முன் தினம் இந்த அவையில் அமைச்சர் அவர்கள் பேசினார்கள். இது சம்பந்தமான நடவடிக்கைகள் தீவிரமாக் கப்பட்டு இருக்கிறதே தவிர குறைக்கப்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது. 3 ஆண்டு காலமாக உள்ள

பாக்கிகளை எல்லாம் திடீரென்று வசூலிப்பது என்பது சரியல்ல. முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் விவசாய உயர் மட்டக் குழுவின் அறிக்கை வந்த பிறகுதான் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும், அது வரையில் எந்த்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று உறுதி மொழி கொடுத்ததையும் மீறி, அந்த உறுதி மொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டு, இன்றையதினம் மின் இணைப்புகள் துண்டிக்கப் படுகின்றன. இது விவசாயிகளை மிகவும் பாதிக்கும். ஆகவே, அரசாங்கம் உடனடியாக உயர் மட்டக் குழுவின் அறிக்கையைப் பெற்று அதன் பேரில் நடவடிக்கை எடுக்க முயற்ச்சிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், சாதாரணமாக ஒரு நகரத்திலே, ஊரிலே இருக்கிற தொழிலாளர் பிரச்சினை என்றால் அல்லது வேறு எந்தப் பிரசிச்னை யென்றா லும் அதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது. ஆனால் இந்த விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னையில் அது சிறிய கோரிக்கையாக இருந்தாலும், பெரிய கோரிக்கையாக இருந்தாலும், அவர்கள் அன் ஆர்கனைசுடு லேப ராக ஒற்றுமை இல்லாத லேபராக அவர்கள் இருப்பதால் அவர்கள் மீது எந்தவிதமான அக்கரையும் செலுத்துவது இல்லை. அரசாங்கம் விவசாயிகளின் நிலையை உடனடியாக புரிந்து கொண்டு, மின் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், ரெவின்யூ துறையைச் சேர்ந்தவர்களுக்கும், சொல்ல வேண்டும். போலீஸ் வைத்துக் கொண்டு மின் துண்டிப்பு செய்வது வேதனையாக இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 5 பேர் பேச வேண்டும். சுருக்கமாக பேசுங்கள். இது எப்படி ஒத்திவைத்து விவாதிக்கத்தக்க அளவிற்கு முக்கியம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : அதே நேரத்தில் தொழில் அதிபர்கள் பல லட்ச ரூபாய் அளவிற்குக் கட்டாமல் இருந்தால்கூட அவர் களுக்கு மின் துண்டிப்பு நிச்சயம் செய்வது இல்லை. அரசாங்கம் அதைச் செய்யாததற்குக் காரணம் லட்சக் கணக்கான ரூபாய் வரி கட்டுகிறார்கள்; பல பேருக்கு வேலை கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பல லட்சக்கணக்கான மக்களுக்கு உணவும், விவசாயத்தையே தங்களுடைய பிழைப்பாக வைத்துக் கொண்டு இருக்கும் விவசாயிகளுக்கு பம்பு செட்டிற்கு உள்ள மின் இணைப்பைத் துண்டிப்பது என்பது சரியல்ல. உயர் மட்டக் குழுவின் அறிக்கை வந்தபின்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இது சம்பந்தமாக விரிவாக விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கெள்கிறோன்.

1979 மார்ச் 7]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மின்சார துண்டிப்பு விவசாயிகளை மாத்திரமல்ல, பொதுவாக தமிழகத்தையே மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கும் என்பதை அனைவரும் உணர்ந்து இருக்கிறோம். மூன்றாண்டு காலமாக உள்ள மின் கட்டண பாக்கியை, தற்போது அவர்களின் விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காத நேரத்தில் வசூலிப்பது என்பது சரியல்ல. அதனால் இன்றைக்கு பெரிய நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. நெல்லுக்கு ஒரு குவின்டாலுக்கு ரூ. 70 தான் கிடைக்கிறது. ரூ. 117 உற்பத்தி செலவு ஆகிறது என்று முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பருத்தி விலை ரூ. 200 தான் இருக்கிறது. நூலுக்கு விலை 20 சதவீதம் கூடியிருக்கிறபோது பருத்தி விலை குறைந்திருக்கிறது. புயல் வெள்ளத்தின் காரணமாக தொடர்ந்து விவசாயிகள் நஷ்டம் அடைந்து கொண்டு இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்களுக்கு நிவாரணம் தேவை.

[முற்பகல் 10–10]

100 யூனிட் பயன்படுத்துகின்றவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு 20 பைசா வீதம் கொடுக்கப்படுகிறது. ஆயிரம் யூனிட் பயன்படுத்துகிறவர்களுக்கு 13 பைசா வீதம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் இதிலேகூட சிறு விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரியானப் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு காணவேண்டும். மின்சாரக் கட்டணம், அதற்கு சர்சார்ஜ், ஆர்ஸ் பவர் சார்ஜ் இப்படி பல்வேறு விதமான கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இவைகளை எல்லாம் குறைக்க வேண்டும். இந்த மின்சார சப்ளையினால் உற்பத்தி பெருகுகிறது. ஆனால், உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்கவில்லை. அதனால் தமிழ்நாடு பூராவும் இருக்கிற விவசாயிகள் இன்றைக்கு ஒரு பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த கிளர்ச்சியில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்; எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தன்னுடைய அறிக்கையைத் தருவதற்கு முன்னால் அரசு கொடுத்த வாக்குறுதிக்கு விரோதமாக அரசாங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டதால், அந்த உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் குழுவிலிருந்து வெளியேறிவிட்டார்கள். பின்னால் முதலமைச்சர் அமெரிக்காவிலிருந்து வந்த பிறகு அவர்களை மீண்டும் அழைத்துப் பேசி, உயர்மட்டக் குழுவின் அறிக்கை வருவதற்கு முன் மின் துண்டிப்பு, கெடுபிடி வசூல், ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எழுத்து மூலமாக அப்படிச் சொல்லாவிட்டாலும்

[திரு. சோ. அழகர்சாமி [1979 மார்ச் 7]

உயர்மட்டக் குழு உறுப்பினர்களுடன் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அப்போது உயர் மட்டக் குழுவினுடைய அறிக்கை வரும் வரையில் எந்தவிதமான இடையூறும் விவசாயிகளுக்கு அளிக்க மாட்டோம் என்று சொல்லி, ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அதற்கு விரோதமாக மின்சாரத் துண்டிப்பு, ஜப்தி நடவடிக்கை, கெடுபிடி வசூல் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. நூற்றுக் கணக்கான போலீசாரை ஏவிவிட்டு, விவசாயிகளுக்கு பெருத்த இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய பயங்கரமான போர் நடைபெறுவதைப்போல அவர்களுடைய நடவடிக்கை இருக்கிறது. உயர்மட்டக் குழுவுக்கு அளித்த வாக்குறுதிக்கு விரோதமாக அரசாங்கம் நடந்து கொள்கிற இந்த நிலை விவசாயிகளிடையே ஒரு பதட்ட நிலையை தோற்றுவித்து, நூற்றுக்கணக்கான போலீசாரை விவசாயிகளுக்கு எதிராக ஏவிவிட்டு, அவர்களுடைய உற்பத்தியை அழிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்களைப் பற்றியெல்லாம் விவாதிக்க இந்த அவையை குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது ஒத்திவைத்து விவாதிப்போம். அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லட்டும். எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லட்டும். எல்லா தரப்பினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒரு மணி நேரத்திற்காவது ஒத்திவைக்க வேண்டும், இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அமரும் மாடம் மூடப்பட்டிருப்பது குறித்து.

திரு. நா. சுந்தரராஜ் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. பார்வையாளர்களை அனுமதிக்காவிட்டாலும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அமரும் மாடம் கூட மூடப்பட்டிருக்கிறது. அது அவர்களுடைய உரிமையை பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இது மிகவும் வருந்தத்தக்க ஒரு செயல். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் எல்லாம் லாபியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்து பார்க்கக்கூடிய மாடமாவது திறந்துவிடப்படுமா ?